அதே நேரத்தில், சிதம்பரம் நகரத்திற்கு, உலக வங்கித் திட்டத்தின்கீழ் புறவழிச் சாலை அமைக்கப்பட்டிருக்கிறது. இதனால் மிகப் பெரிய போக்குவரத்து நெரிசல் குறைக்கப்பட்டிருக்கிறது. எனவே வாகனங்களுடைய வேகத்தைக் கட்டுப்படுத்துவதற்கு மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்தக் கோரிக்கையை அரசு பரிசீலிக்கும். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரம் ஆகிவிட்டது. வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

37—

நவீனப்படுத்துதல்

***107659—திரு. கி. ஆறுமுகம்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அங்கன்வாடி மையங்களை நவீனப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

குழந்தைகள் மையங்களில் சுகாதார முறையில் உணவு வழங்குவதற்காகவும், புகையில்லா சுற்றுப்புறச்சூழலை ஏற்படுத்தவும், மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அரசு பொறுப்பேற்றது முதல், அதாவது, 2006–2007 ஆம் ஆண்டு முதல் இவ்வாண்டு வரை 9,940 மையங்களில் மின்சார வசதியுடன் எரிவாயு இணைப்பு அடுப்பு, அடுகலன் அதாவது குக்கர் ஆகியவை வழங்கப்பட்டு நவீனப்படுத்தப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

முற்பகல் 10–20

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்பொழுது 9,940 அங்கன்வாடி

2011 பிப்ரவரி 9]

மையங்களுக்கு, புகையைப் போக்குகிற வகையில், எரிவாயு அடுப்பு வழங்கப்பட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். எஞ்சியிருக்கிற அங்கன்வாடி மையங்களுக்கும் இதுபோன்ற சமையல் எரிவாயு அடுப்புகள் கொடுக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

அதேபோன்று, நிறைய கட்டடங்கள் மிகவும் பழுதடைந்து இடிந்த நிலையில் இருக்கின்றன. காஞ்சிபுரம் மாவட்டத்தில் பல இடங்களில் நான் பார்த்திருக்கிறேன். இருக்கின்ற கட்டடங்கள், காற்றோட்ட வசதி இல்லாமலிருக்கின்றன. அவற்றை காற்றோட்ட வசதியுள்ள கட்டடங்களாக மாற்றுவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கன்வாடி மையங்களையெல்லாம் நவீனப்படுத்த வேண்டும், ஒரு குழந்தை நேய முறையில், தொடக்கக் கல்வி, அடிப்படைக் கல்வி பயிலக்கூடிய வகையில் அமைய வேண்டுமென்பதற்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இத்தனை முயற்சிகளையும் எடுத்துவருகிறார்கள். மாணவர்களுக்கு தட்டு, டம்ளர் வாங்கிக் கொடுக்கப்படுகிறது. மையங்களுக்கு சமையல் பாத்திரங்கள், மாணவர்கள் அமர்வதற்கு கோரைப் பாய்கள், மலைப் பகுதிகளுக்கு பெஞ்சுகள், சேமிப்புக் கலன்கள், விளையாட்டுப் பொருட்கள் என்று எல்லா வசதிகளையும் அரசு படிப்படியாகச் செய்து வருகிறது.

அதைப்போல, கட்டடத்தைப்பற்றிக் கூறினார்கள். கட்டடங்கள் சுகாதாரமற்று, காற்றோட்ட வசதி இல்லாமல் இருக்கின்றன என்பதை அறிந்துதான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அதற்கு சிறப்புக் கவனம் எடுத்து, சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து கட்டாயம் நிதி கொடுக்க வேண்டுமென்று அறிவித்ததால், ஆண்டுக்கு 20 இலட்சம் ரூபாய் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்தும் இன்றைக்கு ஒதுக்கப்பட்டு, அந்தக் கட்டடங்களெல்லாம் தற்பொழுது நவீனப்படுத்தப்பட்டு வருகின்றன. சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன் கட்டப்படும் கட்டடங்களும் நவீன முறையில், குழந்தைகள் நேய கழிப்பறை

வசதியோடு கட்டப்படுகின்றன. கிட்டத்தட்ட 29,000 மையங்களுக்குக் குடிநீர் வசதி, கலைஞர் அவர்களின் ஆட்சியில்தான் செய்யப்பட்டுள்ளது. கழிப்பறை வசதியைப் பொறுத்தவரையில், கிட்டத்தட்ட 19,000 கழிப்பறைகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களது துறையின்மூலம், அவர்களுடைய சிறப்பு முயற்சியின்மூலம் நவீனப்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் கட்டடங்களும் கட்டப்பட்டு வருகின்றன. மீண்டும் கலைஞர் ஆட்சி ஆறாவது முறையாகப் பொறுப்பேற்கும்போது தொடர்ச்சியான வசதிப் பணிகள் குழந்தைகள் மையங்கள் நவீனப்படுத்துவது தொடரும் என்பதைத் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அங்கன்வாடி மற்றும் சத்துணவு மையங்களில் பணியாற்றுபவர்கள் பணி நிரந்தரம் வேண்டுமென்றும், சம்பள உயர்வு வேண்டுமென்றும், பணி ஓய்வூதியம் வேண்டுமென்றும், பணிமூப்பு அடிப்படையில் பணி உயர்வு வேண்டுமென்றும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். பணிமூப்பு அடிப்படை என்பது அந்தத் துறையிலே மட்டுமல்லாமல், பல்வேறு துறைகளிலும் எங்களுக்கு வேண்டும், நாங்கள் பட்டம் பெற்றிருக்கிறோம், பிளஸ் 2 தேர்ச்சி பெற்றிருக்கிறோம் என்று பல கோரிக்கைகளை வைக்கிறார்கள். எனவே, அவர்களுடைய தகுதிக்கேற்ப வேறு துறைகளிலும், அவர்களின் பணிமூப்பு அடிப்படையில் பணி வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மேலும், இந்த ஆண்டு எத்தனை புதிய அங்கன்வாடி மையங்கள் திறக்கப்படும் என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து கடந்த நான்கு ஆண்டுகளாக 11,762 புதிய மையங்கள், அதாவது குறு மையங்களும், main centres-ம் சேர்த்து திறக்கப்பட்டுள்ளன.

2011 பிப்ரவரி 9]

அதேபோல, சத்துணவுப் பணியாளர்கள் மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்களுடைய கோரிக்கைகளைப்பற்றிக் கூறினார்கள். கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பின்புதான் அவர்களுக்குப் பதவி உயர்வு வாய்ப்பு வழங்கப்பட்டு, முதற்கட்டமாகச் சத்துணவுப் பணியாளர்கள் 40 பேருக்கு அரசுத் துறையிலே, கால முறை ஊதியத்தில், கடந்த வாரம் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் பணி ஆணைகள் வழங்கப்பட்டன. அதேபோல, பி.எட். பட்டதாரிகளுக்கு வருகின்ற 20 ஆம் தேதி, அரசு தேர்வாணையத்தின்மூலம், சிறப்புத் தேர்வு நடத்தப்படவுள்ளதாக தேர்வாணையம் அறிவித்துள்ளது. அதன்மூலம் அவர்கள் கல்வித் துறையில் ஆசிரியர்களாகப் பணி நியமனம் செய்வதற்காக சிறப்புத் தேர்வு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல, பதவி உயர்வு, ஓய்வூதியம், ஊதிய உயர்வு போன்ற சலுகைகள் எல்லாம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னர் வழங்கப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக, நீங்கள் கூறுவதுபோன்று அரசுத் துறைகளிலே பணி நியமனம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையையும் அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 38, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

38—

விடுதி

***59025—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், கே. வேட்ரப்பட்டியில் புதியதாக பெண்கள் ஆதி திராவிடர் நல விடுதி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS